
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்
RNI-TNTAM/2023/88253






| Vol: 02 | Issue: 167 | 4 Pages | 14.1.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 167 | 4 பக்கங்கள் | 14.1.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு**
**நிலத்தறைந்தான் கைபிழையா தற்று**

**விளக்கம்:** (தன் வல்லமை புலப்படுத்தச்) சினத்தை பொருளென்று கொண்டவன் அழிதல், நிலத்தை அறைந்தவனுடைய கை தப்பாதது போல் ஆகும்.

# இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கல், மாநிலத்தில் வளர்ச்சி பொங்கல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜன.14

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ளபொங்கல்வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

★ தை மகளை வரவேற்போம்; தாய் தமிழைப் போற்றிடுவோம்.

★ உழைப்புக்கு மரியாதை செலுத்தி, உழவுக்கு துணை நின்ற கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் திருவிழாதான் பொங்கல்.

★ பொங்கலை பண்பாட்டுத் திருவிழாவாக கொண்டாடி மகிழும் வண்ணம் சென்னை சங்கமம், நம்ம ஊரு திருவிழா நடைபெற உள்ளது.

★ சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவை ஜன.13 ந்தேதி முதல் 17ந்தேதி வரை சீரும் சிறப்புமாக அவரவர் ஊர்களில் நடத்த வேண்டும்.

★ கலை, இலக்கியம், விளையாட்டுப்போட்டி நடத்தி பரிசுகளை அளித்து மக்களை மகிழ்வித்து மகிழ்ந்திட வேண்டும்.



★ இல்லத்தின் முன்பு இன்பம் பொங்கும் தமிழ்நாடு என்று வண்ணக்கோலமிட்டு தை மகளை வரவேற்போம்.

★ அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் ஆண்டு 2056 நல்வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

## பள்ளிக்கு சென்ற மாணவி கருப்பு வேனில் கடத்தல்: சினிமாவை மிஞ்சும் காட்சிகள்



கொழும்பு, ஜன.14

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் பள்ளி மாணவி ஒருவர், தனது சக தோழியுடன் நேற்று காலை பள்ளிக்கு சென்றுகொண்டிருந்தார். அப்போது அப்பகுதியில் வந்த கருப்பு மினி வேன் ஒன்று, சாலையின் ஓரம் நின்றது. மாணவிகள் வேனின் அருகே வந்தபோது திடீரென வேனில் இருந்து வெளியே வந்த மர்ம நபர் ஒருவர், மாணவிகள் இருவரில் ஒருவரை வலுக்கட்டாயமாக பிடித்து வேனுக்குள் தள்ளினார். இதனை சற்றும் எதிர்பாராத அந்த மாணவி, சுதாரிப்பதற்குள் அந்த மர்ம நபர் மாணவியை வேனுக்குள் தள்ளிவிவிட்டார். மாணவியுடன் வந்த சக மாணவி, இதைக்கண்டு அதிர்ச்சியடைந்து அங்கிருந்து ஓடிவிட்டார்.

இந்த காட்சிகளை சுமார் 50 மீட்டர் தூரம் தள்ளி நின்று பார்த்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர், வேகமாக ஓடி வந்து மாணவியை அந்த மர்ம நபரிடம் இருந்து காப்பாற்ற முயன்றார். வேனுக்குள் இருந்து மாணவியை மீட்பதற்குள் அந்த வேன், காப்பாற்ற வந்த இளைஞரை இழுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டது. தொடர்ந்து வேனில் தொங்கியவாறே அந்த இளைஞர் மாணவியை காப்பாற்ற முற்பட்ட நிலையில், சுமார் அரை கிலோமீட்டர் தூரம் சென்று கீழே விழுந்துவிட்டார்.

இந்த தகவலை அறிந்த மாணவியின் பெற்றோர், அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக அவர்கள் போலீசில் புகார் அளித்தனர். போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், கடந்தலில் ஈடுபட்ட நபர், மாணவியின் உறவினர் என்பது தெரியவந்துள்ளது. மேலும், அந்த நபருக்கும், மாணவிக்கும் திருமணம் செய்ய முடிவு செய்ததாகவும், பின்னர் சிறுமியின் பெற்றோர் திருமணத்துக்கு சம்மதிக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

திருமணத்துக்கு மாணவியின் பெற்றோர் சம்மதம் தெரிவிக்காததால் இந்த கடத்தல் நடந்திருக்கலாம் என போலீசார் சந்தேகிக்கின்றனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வேனை போலீசார் கண்டுபிடித்த நிலையில், மாணவியையும், கடத்தலில் ஈடுபட்ட நபரையும் விரைந்து கண்டுபிடிப்பதற்காக மூன்று தனிப்படைகள் அமைத்து தேடிவருகின்றனர்.

இதற்கிடையே, பள்ளிமாணவியை ஆட்கள் நடமாட்டமுள்ள சாலையில் வேனில் கடத்திச் செல்லப்படும் வீடியோ காட்சிகள் இணையத்தில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஊ.ஒ ந. பள்ளி சுண்டக்காம் பாளையத்தில் சமத்துவ பொங்கல் விழா

சுண்டக்காம் பாளையம், ஜன.14

சுண்டக்காம் பாளையம் ஜனவரி 13 அன்று ஊ.ஒ ந. பள்ளி சுண்டக்காம் பாளையம் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. முன்னதாக புகையில்லா போகி பற்றியும் பொங்கல் விழா பற்றியும் பள்ளி தலைமை ஆசிரியர் சு. காளியப்பன் எடுத்துக் கூறினார்.

மாணவர்களிடையே புகையில்லா போகி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு மாணவர்களிடையே சமத்துவத்தை வலியுறுத்தும் விதமாக சமத்துவ பொங்கல் வைக்கப்பட்டு மாணவர்களுக்கு பொங்கல் மற்றும் கரும்பு வழங்கப்பட்டது. விழாவில் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் மகிழ்வுடன் கலந்து கொண்டனர் .



## நடிகர் அஜித்திற்கு எடப்பாடி வாழ்த்து



சென்னை ஜன.14


துபாயில் நடந்த 24H கார் பந்தயத்தில் 991 பிரிவில் நடிகர் அஜித்தின் 'அஜித்குமார் ரேசிங்' அணி மூன்றாவது இடம் பிடித்து அசத்தியுள்ளது. தனது அணி மூன்றாவது இடம்பிடித்த நிலையில், நடிகர் அஜித்குமார், இந்திய தேசியக்கொடியுடன் வலம் வந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இந்த கார் பந்தயத்தில் பங்கேற்க தயாராகி வந்த அஜித் கடைசி நேரத்தில் பந்தயத்தில் இருந்து விலகிக் கொண்டார். எனினும், அவரது அணி பங்கேற்றது.

கார் பந்தயத்தில் மூன்றாவது இடம்பிடித்த அஜித்குமார் ரேசிங் அணிக்கு தமிழ் திரையுலகைச் சேர்ந்த பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அஜித்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

துபாயில் நடைபெற்ற 24H கார் பந்தயத்தில் 3வது இடத்தைப் பிடித்துள்ள முன்னணி நடிகர், அன்புச் சகோதரர் அஜித்குமார் தலைமையிலான அணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்! மேலும் பல வெற்றிகளைக் குவித்து, நம் மாநிலத்திற்கும் நாட்டிற்கும் மென்மேலும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வட கொரியா வீரர்கள் 2 பேர் சிறைபிடிப்பு : உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி




கீவ், ஜன.14

உக்ரைன் மற்றும் ரஷியா இடையிலான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷியாவுக்கு உதவுவதற்காக வடகொரியாவும் தனது ராணுவ வீரர்களை அனுப்பியுள்ளது. இதற்கு கைமாறாக அதிநவீன ஏவுகணை தொழில்நுட்பத்தை வடகொரியாவுக்கு ரஷியா வழங்கியுள்ளதாகவும் புகார் எழுந்துள்ளது. அந்தத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட ஏவுகணையை தான் வடகொரியா சோதனை செய்துள்ளதாகவும் அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகளும் குற்றம் சாட்டி வருகின்றன.

இதனிடையே, ரஷியாவுக்காக போரிட்ட வடகொரியா வீரர்கள் இருவரை பிடித்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியதாவது: உக்ரைனில் வட கொரியா ராணுவ வீரர்கள் 2 பேர் சிறை பிடிக்கப்பட்டு உள்ளனர். 2 பேரும் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

ஒருவரின் தாடையில் காயம் ஏற்பட்டுள்ளது. மற்றொரு ராணுவ வீரருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. சர்வதேச விதிகளின்படி வீரர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ரஷியா என்ன செய்கிறது என்பதை உலகம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்" என்றார். மேலும், வடகொரிய வீரர்கள் இருக்கும் வீடியோவையும் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ளார்.

## புதுச்சேரி அருகே 2 கார்கள் நேருக்கு நேர் மோதி விபத்து : போலீசார் உள்பட 4 பேர் பலி



விழுப்புரம், ஜன.14

விழுப்புரத்தின் தலைமை காவலர் பிரபாகரன் என்பவர் விழுப்புரம்புதுச்சேரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மதகடிப்பட்டு மேம்பாலத்தின் மீது தனது குடுபத்தினருடன் 5 பேர் காரில் சென்றுகொண்டிருந்தார். இதே சமபயம் புதுச்சேரி விழுப்புரம் நோக்கு 2 பேர் காரில் சென்றுகொண்டிருந்தனர். 2கார்களும் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் கார் ஓட்டுனர் மற்றும் பிரபாகரன் உயிரிழந்தனர். மற்றொரு காரில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பு வைத்தனர். மேலும் இறந்தவர்களின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தனர்.

இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



சாம்பவர்வடகரை ராமசாமி கோவிலில் நடைபெறும் சுவாமி விவேகானந்தரின் 162வது ஜெயந்தி விழா தமிழர் திருநாள் 36ம் ஆண்டு விளையாட்டு விழா போட்டிகளில் ஓவிய போட்டியில் கலந்து கொண்ட சாம்பவர்வடகரை மேலூர் அரசு தொடக்கப் பள்ளி ஒன்றாம் வகுப்பு மாணவி வெ.மகாலலிதா தென்காசி மாவட்ட ஆட்சியர் நேரடி உதவியாளர் ந.செல்வம் பரிசு வழங்கினார்

## அங்கோலா: காலரா தொற்றுக்கு 12 பேர் பலி



லுவாண்டா, ஜன.14

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான அங்கோலா நாட்டில் காலரா தொற்று பரவி வருகிறது. இதில், கடந்த செவ்வாய் கிழமை முதன்முறையாக தொற்று பதிவு உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில், அடுத்தடுத்து தொற்று பரவி 170 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர் என தெரிய வந்தது.

அவர்களுக்கு நடந்த பரிசோதனையில், 14 பேருக்கு தொற்று இருப்பது உறுதியாகி உள்ளது. 12லட்சம் பேர் வசிக்ககூடிய லுவாண்டா மாகாணத்தில் ககுவாகோ புறநகர் பகுதியில் காலரா தொற்று பரவி வருகிறது. இந்நிலையில், காலரா தொற்றுக்கு 12 பேர் பலியாகி உள்ளனர். இதனை அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்து உள்ளது.



# பாரதமே உயர்ந்த தாய் என்பதை மறந்துவிடாதீர்கள் ஆளுநர் ஆர்.என். ரவி

சென்னை, ஜன.14

தமிழக சட்டசபையில் ஒவ்வொரு ஆண்டும் முதல்கூட்டத்தில் ஆளுநர் உரையாற்றுவது மரபு. அந்த வகையில், இந்த ஆண்டின் முதல் சட்டசபை கூட்டத் தொடர் கடந்த 6ஆம் தேதி துவங்கியது. இந்தக்கூட்டத்தில் தேசிய கீதம் பாடவில்லை என்று குற்றச்சாட்டிவிட்டு ஆளுநர் ஆர்.என். ரவி அவையில் இருந்து வெளியேறினார்.

ஆளுநர் உரையை வாசிக்காமல் மூன்றே நிமிடங்களில் அவையில் இருந்து ஆளுநர் ஆர்.என். ரவி வெளியேறியதால் பரபரப்பு ஏற்பட்டது. ஆளுநரின் செயலுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி



தலைவர்கள் கடும் விமர்சனங்களைமுன்வைத்தனர். இதுகுறித்துபேசும்போது, ஆளுநரின் செயல் சிறுபிள்ளைத்தனமானது என்று முதல்வர் கூறியிருந்தார்.

முதலமைச்சரின் கருத்து பதில் அளித்துள்ள ஆளுநர் மாளிகை, எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. அந்த பதிவில், "முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தேசிய கீதத்துக்கு உரிய மரியாதையை வலியுறுத்துவதையும், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகளைச் செய்யச் சொல்வதையும் "அபத்தமானது" மற்றும் "சிறுபிள்ளைத்தனமானது" என்று வற்புறுத்துகிறார்."

"பாரதத்தை ஒரு தேசமாகவும் அதன் அரசியலமைப்பாகவும் ஏற்றுக் கொள்ளாத மற்றும் மதிக்காத ஒரு தலைவராக இருக்கும் அவர் கூட்டு நலன்கள் மற்றும் சித்தாந்தங்களின் உண்மையான நோக்கங்களை வஞ்சகம் செய்ததற்கு நன்றி."

"இத்தகைய ஆணவம் நல்லதல்ல. பாரதமே உயர்ந்த தாய் என்பதையும், அவளது குழந்தைகளுக்கு அரசியலமைப்பே உயர்ந்த நம்பிக்கை என்பதையும் மறந்துவிடாதீர்கள். அவர்கள் இத்தகைய வெட்கக்கேடான அவமானத்தை விரும்பவோ பொறுத்துக்கொள்ளவோ மாட்டார்கள்," என்று கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதியில் பா.ஜ.க. போட்டியா? நிர்வாகிகளுடன் ஆலோசனை

சென்னை ஜன.14

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவால் அந்த தொகுதியில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5ந் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது.

கடந்த 10ந்தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. வருகிற 17ந்தேதி மனு தாக்கல் செய்ய கடைசிநாள். தி.மு.க. கூட்டணியில் தனது கைவசம் இருந்த இந்த தொகுதியில் காங்கிரஸ் போட்டியிட விரும்பாததால் தி.மு.க. போட்டியிடுகிறது. தி.மு.க. சார்பில் சந்திரகுமார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். இவர் தே.மு.தி.க.வில் இருந்தபோது இந்த தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. விக்கிரவாண்டி இடைத் தேர்தலை புறக்கணித்ததை போல் ஈரோடு கிழக்கு தொகுதியிலும் போட்டியிடாமல் புறக்கணித்துள்ளது.

கடந்த தேர்தலில் நடந்த முறைகேடுகளை சுட்டிக்காட்டி இந்த தேர்தலும் நேர்மையாக நடக்காது என்பதால் புறக்கணிக்கும் முடிவை எடுத்து இருப்பதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

அதன் கூட்டணி கட்சியான தே.மு.தி.க.வும் போட்டியிடவில்லை என்று அறிவித்து விட்டது.

எனவே தி.மு.க.வை எதிர்த்து போட்டியிட போவதுயார்என்றகேள்வி எழுந்துள்ளது. தற்போதைய நிலையில் நாம் தமிழர் கட்சி மட்டும் போட்டியிட போவதாக அறிவித்துள்ளது. வேட்பாளர்இன்னும்அறிவிக்கப்படவில்லை.

பா.ஜ.க.வும் இதுவரை தனது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. கடந்த 2021 தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.கா. போட்டியிட்டது. அந்த கட்சி சார்பில் போட்டியிட்ட யுவராஜ் காங்கிரஸ் வேட்பாளரை விட 8 ஆயிரம் வாக்குகள் குறைவாக பெற்று தோல்வியை தழுவினார். அந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரான திருமகன் ஈ.வெ.ரா. பெற்ற வாக்குகள் 67,300, த.மா.கா. வேட்பாளர் பெற்ற வாக்குகள் 58,396.

கொங்கு மண்டலத்தை பொறுத்தவரை அ.தி.மு.க.வுக்கு கணிசமான செல்வாக்கு உண்டு. எனவே அ.தி.மு.க. போட்டியிடாவிட்டாலும் முன்பு போல் அ.தி.மு.க. ஆதரவுடன் த.மா.கா.வை போட்டியிட செய்து அனைத்து கட்சிகளும் ஆதரவளிக்கலாம் என்ற யோசனையை பா.ஜ.க. முன் வைத்தது. இது தொடர்பாக ரகசிய பேச்சுக்களும் நடந்தன. ஆனால் எந்த கட்சியும் இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை.

இதற்கிடையில் சென்னையில் முகாமிட்டுள்ள பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் மத்திய மந்திரி எல்.முருகன், பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி ஆகியோரும் பங்கேற்றார்கள்.

ஏற்கனவே கடந்த 2 நாட்களுக்கு முன்பு நடந்த ஆலோசனையில் ஒருமித்த கருத்து ஏதும் ஏற்படவில்லை. இன்று புதிய மாவட்ட தலைவர்களை தேர்வு செய்வது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள். அத்துடன் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலில் எடுக்க வேண்டிய நிலைப்பாடு பற்றியும் ஆலோசித்தார்கள்.

த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசனும் கட்சி அலுவலகத்தில் இன்று ஈரோடு மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில் மாநில துணைத் தலைவர் விடியல் சேகர், யுவராஜா, ஈரோடு மாவட்ட தலைவர் ஜெயக்குமார், புறநகர் மாவட்ட தலைவர் சண்முகம், செயற்குழு உறுப்பினர் ஈசுவரமூர்த்தி மற்றும் மாநில நிர்வாகிகள் பங்கேற்றனர்.

த.மா.கா., பா.ஜ.க. ஆகிய இரு கட்சிகளும் இன்று தங்கள் நிலைப்பாட்டை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் பா.ஜ.க. களம் இறங்குமா? அல்லது த.மா.கா. போட்டியிடுமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இதற்கிடையில் முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வமும் கூட்டணி கட்சிகளுடன் பேசி தேர்தலில் போட்டியிடுவது பற்றி முடிவு செய்யப்போவதாக அறிவித்து உள்ளார்.

# அனைவரும் நலமும், வளமும் பெற்று வாழ வழி பிறக்கட்டும் எடப்பாடி பழனிசாமி பொங்கல் வாழ்த்து

சென்னை, ஜன.14

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

உலகத் தமிழர்கள் எல்லோரும் அன்பு பொங்க, இன்பம்பொங்க,இனிமை பொங்க மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழும் தைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், எனதருமைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய பொங்கல் நன்னாளில், மக்கள் தங்களது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக, வீட்டினுள்ளும், வெளி வாசலிலும் வண்ணக் கோலங்களினால் அலங்கரித்து, கடவுளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நெற்கதிர்,கரும்பு,வாழை, இஞ்சி, மஞ்சள் ஆகிய விளைபொருட்களை வைத்து, புதுப்பானையில் அரிசியிட்டு பால் ஊற்றி, அது பொங்கும்போது 'பொங்கலோ பொங்கல்' என்று உற்சாகக் குரலெழுப்பி இறைவனுக்குப் படைத்து வழிபடுவதோடு, தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

உழவர் பெருமக்கள் வாழ்வில் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில், விவசாயப் பெருமக்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளதோடு, நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு, விவசாயிகள் அனைவரும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்ததை இந்த நேரத்தில் பெருமையோடு நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

அறுவடைத்திருநாளாம் பொங்கல் திருநாளில், மக்கள் அனைவரும் குன்றா நலமும், குறையா வளமும், மங்கா புகழும், மாசிலா செல்வமும் பெற்று நிறை வாழ்வு வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, மக்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



பா.ஜ.க.வை சேர்ந்த சரத்குமார் வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

இந்த இனிய அறுவடைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், நமது தேசமும், நாட்டின் மக்களும் என்றென்றும் செழுமையாக, பசுமையாக, வளமாக, ஆரோக்கியமாக இருக்கவும், உலகிற்கு உணவளிக்கும் விவசாயிகளின் உள்ளமும், இல்லமும் மகிழ்வுற்று வாழ்வு சிறக்கவும், அவர்களின் நல்வாழ்வுக்காகவும் பிரார்த்திப்போம்.

வட இந்தியாவில் சங்கராந்தி திருநாளாகவும், பிற மாநிலங்களில் பிஹூ, உத்தராயன், போகி என கொண்டாடப்படும் நாடு தழுவிய அறுவடை திருநாளை கொண்டாடி மகிழ்வோருக்கும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் என் சார்பாகவும், என் குடும்பத்தின் சார்பாகவும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# சென்னை சங்கமம் போல தமிழகத்தில் 8 நகரங்களில் சங்கமம் நம்ம ஊரு திருவிழா: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜன. 14

தமிழகவெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:

'பொங்கலோ பொங்கல்' என்று சொல்லும் போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. புத்துணர்வு பொங்கி வழிகிறது. உள்ள மெல்லாம் பூரிப்பு பிறக்கிறது. நம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாகத் தமிழர் திருநாளாம் பொங்கல்திருநாள்கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழர்களின் பெருமித அடையாளமான ஜல்லிக்கட்டு போட்டி ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகிறது. ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு எனப் பல்வேறு பெயர்களில் இது குறிப்பிடப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டாலும், மதுரை மாவட்டத்தில் நடைபெறும்அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஆகிய 3 இடங்களில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு போட்டி உலகப்புகழ் பெற்றது. அதி லும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு உலகப்புகழ் பெற்றதாகும்.

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், கீழக்கரை கிராமத்தில் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77 ஆயிரத்து 683 சதுரஅடி பரப்பளவில் 62.78 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்துடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தை



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 24.1.2024 அன்று திறந்து வைத்தார். இந்த அரங்கம் தமிழ்நாட்டின் பண்பாட்டை வெளிப்படுத்தும் பாரம்பரிய விளையாட்டுகளை பிரபலப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் உருவாக்கப்பட்ட நவீன அரங்காக அமைந்துள்ளது.

பொங்கல் திருநாளையொட்டி,தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் 'சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா' கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டிற்கான 'சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா' சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடலில் நாளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்படுகிறது. இதில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்தும் மாபெரும் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

மேலும், சென்னையில் 18 இடங்களில் 14ந் தேதி முதல் 17ந் தேதி வரை 4 நாட்கள் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை நடைபெற உள்ளன.

இவ்விழாவில் தமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில்இருந்தும்தேர்வு செய்யப்பட்டுள்ள 1,500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைச்சிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர்கம்பம், வில்லுபாட்டு, கணியன் கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். அத்துடன் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசைக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், கேரளத்தின் தெய்யம் நடனம், மகாரா ஷ்டிராவின் லாவணி நடனம், ராஜஸ்தான்கூமர்நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்தரகாண்டின் சபேலி நடனம் ஆகிய பிற மாநிலக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

விழா நடைபெறும் இடங்களில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பி உண்ணும் பல உணவு வகைகளைக் கொண்ட அரங்குகள் அமைக்கப்பட்டு உணவுத் திருவிழாவும் நடைபெற உள்ளது.

சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியைத் தொடர்ந்து கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய 8 நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம்நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

தமிழர் திருநாளாம் பொங்கலைப் பொதுமக்கள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடிடும் வகையில், கிராமிய மற்றும் கலை நிகழ்ச்சிகள், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் போன்றவை தமிழ்நாடு அரசால் பல்வேறு துறைகளின் மூலம் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# பெருங்குடி குப்பை எரி உலை திட்டத்தை கைவிடாவிட்டால் மக்கள் திரள் போராட்டம்: அன்புமணி ராமதாஸ் அறிவிப்பு


சென்னை, ஜன.14

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

சென்னை பெருங்குடியில் உள்ள குப்பைக்கிடங்கில் குப்பையை எரித்து மின்சாரம் தயாரிக்கும் எரி உலை அமைக்க முடிவு செய்திருக்கும் சென்னை மாநகராட்சி, அதற்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கி இருக்கிறது. அருகில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கும், அப்பகுதியில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கும் பெரும் தீங்கை ஏற்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த திமுக அரசு துடிப்பது கண்டிக்கத்தக்கது.

பெருங்குடியில் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு மிக அருகில் 150 ஏக்கர் பரப்பளவில் குப்பை எரி உலை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த சென்னை மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் சூழலியல் மிகக் கடுமையாக பாதிக்கப்படும்.

எரி உலையில் பிளாஸ்டிக் உள்ளிட்ட அனைத்து குப்பைகளும் ஒன்றாக எரிக்கப்படும். அப்போது டையாக்சின், சல்பர் டையாக்சைடு, கார்பன் மோனாக்சைடு, நைட்ரஜன் டையாக்சைடு, பாதரசம், கரியமில வாயு, டையாக்சைடு மற்றும்



பியூரன் உள்ளிட்டவை வெளியாகும்.

இந்த நச்சு ரசாயனங்களால் புற்றுநோய், இருதய நோய்கள், மூச்சுக்குழல் நோய்கள், ஆண்மைக் குறைவு உள்ளிட்ட பதிப்புகள் ஏற்படும். தோல் நோய், ஈரல் பாதிப்பு, ஆஸ்துமா என பல கேடுகளுக்கு குப்பை எரிப்பு வழி வகுக்கும். மேலை நாடுகளில் மக்கள் குப்பை எரி உலைகளை கடுமையாக எதிர்க்கின்றனர்.

சென்னை மாநகரிலும் குப்பையை எரித்து அதிலிருந்து மின்சாரம் எடுப்பது தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமற்றது ஆகும்.

சென்னையில் கிடைக்கும் குப்பைகளைக் கொண்டு குப்பை எரிஉலை அமைப்பது நடைமுறையில் சாத்தியமில்லை. பெருங்குடியில் குப்பை எரி உலை அமைக்கும் திட்டத்தை சென்னை மாநகராட்சி கைவிட வேண்டும். இல்லாவிட்டால் மக்களைத் திரட்டி மிகப்பெரிய அளவிலான போராட்டத்தை பா.ம.க. நடத்தும்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# பெரியாரை ஒழிக்கும் திட்டத்தை கைவிட்டு காலத்திற்கேற்ப சீமான் செயல்பட வேண்டும் நா.த.க. நிர்வாகி

சென்னை, ஜன.14

ஒரேநாடு, ஒரேதேர்தல், ஒரே மொழி, ஒரே குடும்ப அட்டை போன்ற திட்டங்களை ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. திணிக்கிறது.

பெரியார் குறித்த சீமானின் அவதூறு பேச்சுக்கு நாம் தமிழர் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெகதீச பாண்டியன் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:

★ சீமான் பேச்சு இந்துத்துவா சக்திகளின் வளர்ச்சிக்கு உதவுமே தவிர தமிழ் தேசிய வளர்ச்சிக்கு உதவாது.

★ ஆரியம், இந்துத்துவா, இந்தி, இந்திய தேசியத்தை எதிர்ப்பதுதான் பெரியாரை ஏற்றுக்கொண்டவர்கள் நோக்கம்.

★ தமிழீழத்தையும் பிரபாகரனையும் தமிழ்மொழியையும் இந்துத்துவாவினர் ஏற்றுக் கொள்கிறார்களா?

★ பெரியாரியவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ள அனைத்து சாதியினரும் அர்ச்சராகலாம் என்பதை இந்துத்துவாவாதிகள் எதிர்க்கிறார்கள்.

★ பெரியாரை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் தான் தேசிய கல்விக் கொள்கையை எதிர்க்கிறார்கள்.



★ ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே மொழி, ஒரே குடும்ப அட்டை போன்ற திட்டங்களை ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. திணிக்கிறது.

★ நாம் தமிழர் கட்சி தொடங்கியதும் அரவணைத்தவர்கள் மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிஸ்டுகள் தான்.

★ திராவிடம், பெரியாரை ஒழிக்கும் திட்டத்தை கைவிட்டு காலத்திற்கேற்ப சீமான் செயல்பட வேண்டும்.

★ பகைவர் சூழ்ச்சிக்கு பலியாகாமல் நட்பு முரணோடு சீமான் கைகோர்த்து தமிழ் தேசியம் வெல்ல கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்.

# கம்பத்தில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணியால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் கடும் அவதி

கம்பம். ஜன. 14

தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் 33 வார்டுகள் உள்ளது. சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் இங்குள்ள 4 வது வார்டு காமயகவுண்டன்பட்டி சாலையில் கடந்த சில தினங்களாக நகராட்சி சார்பில் சாக்கடை கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்காக ஜே.சி.பி இயந்திரம் மூலம் பழைய சாக்கடை



தோண்டப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக கழிவு நீர் மாநில நெடுஞ்சாலையின் நடுவே தேங்கி சேரும், சகதியுமாக உள்ளதால் இவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர். இது குறித்து ஒரு சிலர் கூறுகையில், "அதிகமாக வாகன போக்குவரத்து மிகுந்த இந்த சாலையின் வழியாக தினமும் ஏராளமானோர் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் சென்று வருகின்றனர். சேரும், சகதியுமாக உள்ளதால் தடுமாறி கீழே விழுந்து விபத்து ஏற்படும் நிலை உள்ளது.

மேலும் குடியிருப்பு பகுதியாக உள்ளதால் கொசுக்கள் உற்பத்தி அதிகரித்து பொதுமக்களுக்கு தொற்று நோய் பரவும் நிலையும் ஏற்படுகிறது. ஆகவே நகராட்சி நிர்வாகம் உடனடியாக இதை சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்றனர்.

# விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான திரைப்படம் வெளியிட `திடீர்' தடை: போலீசாருடன் வாக்குவாதம்

ராஜபாளையம், ஜன.14

இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடத்திய கடைசி கட்ட போரை மையமாக கொண்டு ராஜபாளையத்தை சேர்ந்த கணேசன் என்பவர் "போர்க் களத்தில் ஒரு பூ" என்ற பெயரில் திரைப்படம் ஒன்றை தயாரித்தார்.



கடந்த 2012ம் ஆண்டு உருவான இந்த படத்திற்கு மத்திய சினிமா தணிக்கை குழு தடை விதித்து உத்தரவிட்டது.

இந்த சினிமாவில் பாலியல் மற்றும் வன்முறை காட்சிகள் அதிகம் இருப்பதாகவும், அதன் காரணமாக திரைப்படம் வெளியாக தடை விதிக்கப்பட்டு உள்ள தாகவும் விளக்கம் அளித்தி ருந்தது. இருந்தபோதிலும் இந்த படத்தை திரையிடுவதற்கான முயற்சிகளை தயாரிப்பாளர் கணேசன் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்.

பல்வேறு தடைகளை தாண்டி போர்க்களத்தில் ஒரு பூ படத்தை 2025ல் வெளியிடலாம் என்று கூறி மத்திய அரசு அனுமதி அளித்தது.

இதையடுத்து ராஜபாளையம் பாலாஜி திரையரங்கில் இன்று அந்த படம் வெளியாக இருந்தது. இதையொட்டி படத்தின் முதல் காட்சியை காண்பதற்காக ராஜபாளையம் பகுதியை சேர்ந்த ம.தி.மு.க., திராவிடர் கழகம், கம்யூனிஸ்டு கட்சியினர், விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்பினருக்கு டிக்கெட் வழங்கப்பட்டு இருந்தது.

அதன்படி இன்று காலை திரையரங்கம் முன்பு ஏராளமானோர் திரண்டிருந்தனர். இதற்கிடையே நேற்று நள்ளிரவில் மீண்டும் அந்த படத்தை வெளியிட மத்திய அரசு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்த தகவல் தமிழக அரசுக்கு இன்று காலை தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் படம் வெளியாக இருந்த ராஜபாளையம் பகுதியில் போலீசார் உஷார்படுத்தப்பட்டனர். மேலும் துணை போலீஸ் சூப்பிரண்டு பிரீத்தி, இன்ஸ்பெக்டர்கள் செல்வி, அசோக்பாபு உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட போலீசார் படம் வெளியாக இருந்த திரையரங்கம் முன்பு குவிக்கப்பட்டனர்.

தியேட்டர் நிர்வாகத்தினர் உடனடியாக படம் திரையிடுவதை தவிர்த்தனர். இருந்தபோதிலும் திரையரங்கம் முன்புதிரண்டிருந்தவர்கள் படத்தை பார்க்காமல் செல்லமாட்டோம் என்று கூறி போலீசாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் மத்திய அரசின் தடை உத்தரவு குறித்து எடுத்துக்கூறி அவர்களை போலீசார் கலைந்து போக செய்தனர்.

இந்த சம்பவத்தால் ராஜபாளையத்தில் இன்று சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: தி.மு.க. வேட்பாளர் 17ந்தேதி வேட்புமனு தாக்கல்



ஈரோடு, ஜன.14

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகிற 5ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்தது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார் போட்டியிடுகிறார்.

இந்நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வரும் 17ந்தேதி வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார். தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் அவர் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளார்.

# மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு 5 ஆயிரம் கனஅடியாக குறைப்பு

சேலம், ஜன.14

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்து கடந்த ஆண்டில் மேட்டூர் அணை 3 முறை நிரம்பியது. இந்த நிலையில் டெல்டா பாசனத்துக்கு தேவைக்கு ஏற்ப தண்ணீர் அதிகரித்தும், குறைத்தும் திறந்து விடப்பட்டு வருகிறது.



இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. பின்னர் தண்ணீர் திறப்பு படிபடியாக குறைக்கப்பட்டு வந்தது. இன்று காலை டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது.

இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 115.03 அடியாக இருந்தது. அணைக்கு நேற்று வினாடிக்கு 745 கனஅடிதண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது இன்று வினாடிக்கு 674 கனஅடியாக குறைந்தது.

அணையில் இருந்து டெல்டாவுக்கு 5 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 300 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 85.76 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# வள்ளலார், வைகுண்டர் போல என்ன புரட்சியை செய்தார் பெரியார்? சீமான்



சென்னை, ஜன.14

சென்னையில் உள்ள நாம்தமிழர்கட்சிதலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவின்போது கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

★ உழவுக்கும் தனக்கும் உறவாக நின்ற மாடுகளுக்கு பண்டிகை வைத்து கொண்டாடிய மரபு தமிழர் மரபு.

★ ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி உறுதியாக நிற்கும்.

★ பொங்கலன்று ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிவிக்கப்படுவார்.

★ பொங்கலன்று யுஜிசி தேர்வை நடத்தும் மத்திய அரசு வட இந்திய பண்டிகைகளின்போது தேர்வு நடத்துமா?. தமிழ்நாட்டில் கேட்க ஆளில்லாததால் மத்திய அரசு இவ்வாறு நடந்து கொள்கிறது.

★ தி.மு.க.வுக்கு வாக்கு செலுத்தி இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் மீண்டும் மீண்டும் தவறு செய்கிறார்கள்.

★ பார்ப்பனர்கள் வேண்டாம் என்று கூறிவிட்டு அவர்களுடன் கூட்டு வைத்தது யார்?

★ வள்ளலார், வைகுண்டர் போல என்ன புரட்சியை செய்தார் பெரியார்?

★ பெரியார் தான் சமூகநீதியை நிலைநாட்டினார் என்றால் 10.5 சதவீத இட ஒதுக்கீடு கேட்டு பா.ம.க. ஏன் போராடுகிறது?

★ ஆதாரத்தை வைத்து பூட்டி வைத்துக்கொண்டு ஆதாரத்தை தா என்றால் எங்கே போவது?

★ பெரியாரை பற்றி பேசி தேர்தலில் ஓட்டு கேட்க எந்த கட்சியாவது தயாரா?

★ பெண்ணுரிமையை பாதுகாத்த ஒரே தலைவர் பிரபாகரன் தான்.

★ தடை செய்யப்பட்ட புலிகளையும், பிரபாகரனையும் பேசி 32 லட்சம் ஓட்டு வாங்கி உள்ளேன் என்று கூறினார்.

# சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சி.இ.ஓ. விஸ்வநாதனுக்கு பாராட்டு விழா: சிறப்பு தபால் தலை வெளியிட்டு நறுவீ மருத்துவமனை தலைவர் ஜி.வி.சம்பத் கௌரவித்தார்

வேலூர், ஜன 14

தமிழ்நாடு கிரிக்கெட் சங்க முன்னாள் செயலாளரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அலுவலருமான கே.எஸ். விஸ்வநாதன் இந்திய கிரிக்கெட் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தினை சிறப்பாக வழிநடத்தியதை கௌரவப்படுத்தும் விதமாக அமெரிக்க நாட்டின் ஹார்ட்போர்டில் அமைந்துள்ள கிரிக்கெட் ஹால் ஆப் ஃபேம் என்ற அருங்காட்சியகத்தில் கே.எஸ். விஸ்வநாதனின் திருஉருவப்படம் இடம்பெற்றுள்ளது. உலக அளவில் கிரிக்கெட் விளையாட்டிற்கு அற்பணிப்புடன் சேவை ஆற்றியவர்களை கௌரவப்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது.

இந்த கௌரவம் பெற்றமைக்காக கே.எஸ். விஸ்வநாதனுக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மாவட்ட செயலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் வேலூரில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வேலூர் மாவட்ட தலைவரும் நறுவீ மருத்துவமனையின் நிறுவனத் தலைவருமான முனைவர் ஜி.வி. சம்பத் கே.எஸ். விஸ்வநாதனுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி பாராட்டி பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஆர்.எஸ். இராமசாமி, துணை செயலாளர் டாக்டர் ஆர்.என். பாபா, முன்னாள் துணைத் தலைவர் சாம் பாபு, உதவி செயலாளர்கள் ஜூலியஸ் விஜய குமார், மார்டின் ராஜ், வெங்கட்ராமன், வேலூர் மாவட்ட செயலாளர் ஸ்ரீதரன், தமிழ்நாடு கிரிக்கெட் சங்க செயலாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் மாரிஸ்வரன், மற்றும் கிரிக்கெட் சங்க இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், சாதனையாளர் விஸ்வநாதனை பாராட்டி வாழ்த்தி பேசினர்.



அப்போது அவரை கௌரவிக்கும் வகையில் சிறப்பு தபால் தலை வெளியிடப்பட்டதுடன், விஸ்வநாதனின் 30 கிலோ எடை கொண்ட திருஉருவச்சிலையை சங்க நிர்வாகிகள் வழங்க அதனை கே.எஸ். விஸ்வநாதன் மற்றும் அவரது துணைவியார் விஜயா விஸ்வநாதன் பெற்றுக்கொண்டனர்.

இதில் ஜி.கே. வேர்ல்டு பள்ளி இயக்குனர் சந்தோஷ் காந்தி, சன்பீம் பள்ளி குழும தலைவர் முனைவர் ஹரிகோபாலன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் தமிழ்நாடு கிரிக்கெட் சங்க மாவட்ட செயலாளர்கள் கூட்டமைப்பு தலைவர் பி.கே.ஜி. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார். முன்னதாக 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டிக்கான சுழற்கோப்பை அறிமுகப்படுத்தி தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணியிடம் வழங்கப்பட்டது.

# சாமிதோப்பு அய்யா வைகுண்ட பதியில் இஸ்ரோ தலைவர் நாராயணன் சாமி தரிசனம்

நாகர்கோவில், ஜன.14

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் மற்றும் விண்வெளித் துறை செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள விஞ்ஞானி டாக்டர் நாராயணன் குமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே மேல காட்டு விளை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.



அவர் வருகிற 14ந்தேதி இஸ்ரோ தலைவராக அவர் பொறுப்பேற்க உள்ளார். இவரது பதவி காலம் 2 ஆண்டுகள் ஆகும். இஸ்ரோ தலைவராக அறிவிக்கப்பட்டுள்ள விஞ்ஞானி நாராயணன் இன்று குமரி மாவட்டம் வந்தார்.

சாமி தோப்பு அய்யா வைகுண்டசாமிதலைமை பதியில் அவர் சாமி தரிசனம் செய்தார். இதைத் தொடர்ந்து சொந்த ஊரான மேலக்காட்டு விளைக்கு வந்தார். அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன் அவரது பெற்றோரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்துகிறார். மாலை 6.30 மணிக்கு அவரது சொந்த ஊரில் உள்ள கோவிலில் சாமி தரிசனம் செய்கிறார்.

# சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவில் தேரோட்டம்: அம்மன் தேரை பெண்கள் வடம் பிடித்து இழுத்தனர்





நாகர்கோவில், ஜன.14

சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் மார்கழி திருவிழா கடந்த 4ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 3ம் திருவிழா அன்று மக்கள்மார் சந்திப்பு நிகழ்ச்சியும், 5ம் திருவிழா அன்று கருட தரிசன நிகழ்ச்சியும் நடந்தது.

விழாவையொட்டி தினமும் காலை, மாலை சுவாமி அம்பாள் வீதி உலா நடைபெற்றது. 9ம்திருவிழாவான இன்று காலையில் கங்காள நாதர் பிட்சாடனராக திரு வீதி உலா நிகழ்ச்சி நடந்தது. இதைத்தொடர்ந்து கோவிலில் தட்டு வாகனத்தில் சுவாமியும், அம்பாளும், அறம் வளர்த்தநாயகியும், விநாயகரும் எடுத்து வரப்பட்டனர்.

பின்னர் பெரிய தேரான சுவாமி தேரில் சுவாமியும், அம்பாளும் அம்மன் தேரில் அறம் வளர்த்த நாயகி அம்மனும், பிள்ளையார் தேரில் விநாயகரும் எழுந்தருளினார்கள். இதைத்தொடர்ந்து தீபாராதனை நடந்தது.

தொடர்ந்து தேர் சக்கரத்தில் தேங்காய் உடைக்கப்பட்டது. பின்னர் 3 தேர்களும் வடம்பிடித்து இழுக்கப்பட்டது. விழாவில் தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ., நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், அறங்காவலர் குழு தலைவர் பிரபா ராமகிருஷ்ணன், சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் அனுசியா, சுவாமி பத்மேந்திரா, காங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவர் நவீன்குமார், தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் அகஸ்தீசன், அ.தி.மு.க. மாவட்ட துணை செயலாளர் சுகுமாரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

அம்மன் தேரை பெண்கள் வடம் பிடித்து இழுத்தனர். 3 தேர்களும் 4 ரத வீதிகள் வழியாக இழுத்து வரப்பட்டது. 'ஓம் காளி ஜெய் காளி' என்ற பக்தி கோஷத்துடன் பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்து சென்றனர்.

தேரோட்ட விழாவில் புதுமண தம்பதியினர் பலரும் கலந்து கொண்டனர். தேரோட்டத்தையொட்டி குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்தனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் குடும்பத்தோடு வந்து தேரோட்ட விழாவில் பலரும் கலந்து கொண்டனர். வெளிமாவட்டங்களில் இருந்து வந்த ஐயப்ப பக்தர்கள் ஏராளமானோரும் தேரோட்ட விழாவில் பங்கேற்றனர். இதனால் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. பக்தர்கள் சாமி தரிசனத்திற்கு பல மணி நேரம் காத்திருந்தனர். 4ரதவீதிகளிலும் பக்தர்கள் தலையாகவே காட்சி அளித்தது. இதையடுத்து கோவில் 4 ரத வீதிகளிலும் இரு சக்கர வாகனங்கள் மற்றும் 4 சக்கர வாகனங்கள் நுழைய தடை விதிக்கப்பட்டு இருந்தது. சாலை ஓரங்களில் பக்தர்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு தேரேட்டத்தை காண வந்திருந்தனர். சுசீந்திரம் புறவழிச்சாலையிலும் ஏராளமான வாகனங்கள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நாகர்கோவிலில் இருந்து சுசீந்திரத்துக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டது. சுசீந்திரம் பேரூராட்சி நிர்வாகம் சார்பில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு இருந்தது. பக்தர்களுக்கு குளிர்பானங்கள், அன்னதானம் வழங்கப்பட்டது.

மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஸ்டாலின் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. இன்று இரவு 12 மணிக்கு கோட்டார் வலம்புரி விநாயகர், மருங்கூர் சுப்பிரமணியசாமி, வேளிமலை குமாரசுவாமி ஆகியோர் விடைபெறும் சப்த வர்ண நிகழ்ச்சி நடக்கிறது. 10ம் திருவிழாவான நாளை (13ந்தேதி) காலை 10 மணிக்கு ஆருத்ரா தரிசனம் நடக்கிறது. மாலையில் நடராஜர் வீதி உலாவும், இரவில் ஆராட்டும் நடக்கிறது.

# திருச்செந்தூரில் சாரை சாரையாக குவியும் பாதயாத்திரை பக்தர்கள்

திருச்செந்தூர், ஜன.14

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2வது படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்கிறார்கள்.

ஆண்டுதோறும் தைப் பொங்கலை முன்னிட்டு நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, ராஜபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்து அலகு குத்தியும்,காவடி எடுத்து வந்தும், சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம்.

அந்த வகையில் நாளை மறுநாள் (செவ்வாய்கிழமை) பொங்கல் திருநாள் கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சாமி தரிசனம் செய்ய பக்தர்கள் சாலையில் சாரை, சாரையாக காவடி எடுத்தும், சுமார் 10 அடி, 12 அடி நீள அலகு குத்தி வந்தவாறு உள்ளனர்.



தமிழ்நாடு மட்டுமல்லாது கேரளா, கர்நாடகா, ஆந்திரா, போன்ற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

பக்தர்கள் வருகை அதிகரிப்பால் திருச்செந்தூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஒரு புறம் சாரை சாரையாக பக்தர்கள், மறுபுறம் நீண்ட வரிசையில் வாகனங்கள் அணி வகுத்ததால் வாகனங்கள் ஆமை வேகத்தில் ஊர்ந்து செல்கின்றன.

விடுமுறை நாள் என்பதால் ஏராளமான பக்தர்கள் கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 6 மணி நேரத்திற்கு மேல் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

மார்கழி மாதத்தை முன்னிட்டு இன்று அதிகாலை 3 மணிக்கு மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 3.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம் 5 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடக்கிறது.

# பழனி நகர தலைமை தமிழக வெற்றி கழகம் சார்பாக பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு நலத்திட்டங்கள் வழங்கும் விழா

பழனி, ஜன.14

திண்டுக்கல் மாவட்டம் பழனி தனியார் மஹாலில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பழனி நகர தமிழக வெற்றிக்கழக தலைமையின் சார்பாக கழகப் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் வழிகாட்டுதலின்படி நகரத் தலைவர் விஜய் சிவா பாலமுருகன் விஜய் அன்பர் ஆகியோர் தலைமையில் பொங்கலோ பொங்கல்" என்று சொல்லும்போதே மக்கள் மனங்களில் மகிழ்ச்சி பொங்குகிறது. தமிழர் தம் ஊனோடு, உயிரோடு, உணர்வோடு கலந்த விழாவாக தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புமிக்க தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை அனைத்து தரப்பு மக்களும் பொங்கலை சிறப்பாக கொண்டாடும் வகையில் தமிழக வெற்றி கழகம் சார்பாக ஆயிரத்து ஐநூறு நபர்களுக்கு ஒரு கிலோ அரிசி. முழுகரும்பு. பாசிப்பருப்பு. வெள்ளம். முந்திரிப் பருப்பு. கிறிஸ்மஸ் பழம். ஏலக்காய். வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது மற்றும் இந்நிகழ்வில் பழனி நகர ஒன்றிய இளைஞரணி தொண்டர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

# ஒகேனக்கலுக்கு நீர்வரத்து 1,200 கனஅடியாக சரிவு

ஒகேனக்கல், ஜன.14

கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கலுக்கு நீர்வரத்து கடந்த ஒரு வாரமாக குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து நேற்று 1500 கனஅடியாக வந்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி 1,200 கனஅடியாக குறைந்து வந்தது.

மெயின் அருவி, ஐந்தருவி, சினிபால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் பரிசல் பயணம் மேற்கொண்டு காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர். மேலும் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் அவர்கள் மெயின் அருவியில் குளி த்தும், பெண்கள் காவிரி ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர். காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் பெண்ணுக்கு பாலியல் தொல்லை: வாலிபர் கைது



சென்னை, ஜன. 14
சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை வளாகத்தில் வாலிபர் ஒருவர் இரவில் தங்கி இருந்தார். மதுபோதையில் இருந்த அந்த வாலிபர், திடீரென மருத்துவமனையின் மகளிர் நோயாளிகள் பிரிவுக்குள் புகுந்தார். அங்கு உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த 50வயது பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த பெண், கத்தி கூச்சலிட்டார். பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு திரண்ட நோயாளிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்கள், உடனடியாக அந்த வாலிபரை பிடித்து போலீசில் ஒப்படைத்தனர். இதையடுத்து அந்த வாலிபர் மீது பெண் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குபதிந்து போலீசார் கைதுசெய்தனர். போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த நபர் ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த சதிஷ்(வயது 28) என்பதும், வேலை தேடி சென்னை வந்த நிலையில், அவர் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததும் தெரியவந்தது. மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# பொங்கல் திருநாள்: காவல்துறை, சீருடை பணியாளர்களுக்கு பதக்கங்கள்: தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டது



சென்னை, ஜன.14
2025 பொங்கல் திருநாளையொட்டி 3,186 தமிழக காவல் துறை மற்றும் சீருடை அலுவலர்கள்/பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

இதுதொடர்பாக கூடுதல் தலைமை செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதல்அமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் (ஆண்/பெண்) காவலர் நிலை2. காவலர் நிலை1, தலைமைக் காவலர்மற்றும்சிறப்பு சார்பு ஆய்வாளர் நிலைகளில் 3000 பணியாளர்களுக்கு "தமிழக முதல்அமைச்சரின் காவல் பதக்கங்கள்"வழங்கதமிழ்நாடு முதல்அமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர். இயந்திரகம்மியர் ஓட்டி, தீயணைப்போர் ஓட்டி (தரம் உயர்த்தப்பட்ட இயந்திர கம்மியர் ஓட்டி) மற்றும் தீயணைப்போர் (தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர்) ஆகிய நிலைகளில் 120 அலுவலர்களுக்கும். சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்துறையில்முதல்நிலை வார்டர்கள்(ஆண்), இரண்டாம் நிலை வார்டர்கள் (ஆண்) மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் (பெண்) நிலைகளில் 60 பேர்களுக்கும் "தமிழக முதல்அமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்"வழங்க தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு நிலை வேறுபாடின்றி மாதாந்திர பதக்கப்படி ரூ.400/, 2025 பிப்ரவரி 1ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப் பிரிவு மற்றும் காவல் புகைப்படக் கலைஞர்கள் பிரிவுகளில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் அலுவலவர்கள் என ஒவ்வொரு பிரிவிலும் 2 நபர்கள் வீதம், மொத்தம் 6 அதிகாரிகள் மற்றும் அலுவலவர்களுக்கு "தமிழக முதல்அமைச்சரின் காவல் தொழில் நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்" வழங்க தமிழ்நாடு முதல்அமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள்.

இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் நிலைகளுக்குத் தக்கவாறு ரொக்க தொகை வழங்கப்படும்.

மேற்கண்ட அனைவருக்கும் பின்னர் நடைபெறும் சிறப்பு பதக்க அணிவகுப்புவிழாவில்தமிழ்நாடு முதல்அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் கூடிய பதக்கச்சுருள் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு கவர்னர் விருது அறிவிப்பு

சென்னை, ஜன.14
கவர்னர் மாளிகை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை தமிழ்நாடு கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு 28 ஜூன் 2024 அன்று இவ்விருதுகளுக்கான அறிவிப்பினை தமிழ்நாடு கவர்னர் மாளிகை வெளியிட்டது. இந்த இரு விருதுகளும் சமூக சேவை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தன்னலமற்ற சேவையை அங்கீகரித்து அவர்களை பாராட்டி ஊக்குவிப்பதற்காக கவர்னர் மாளிகை சார்பாக அறிவிக்கப்பட்டது.

இவ்விருதுகளுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய தேர்வுக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு தேர்வுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய இரு பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை தமிழ்நாடு கவர்னர் மாளிகை பின்வருமாறு அறிவிக்கிறது.

சமூக சேவை' (நிறுவனம்) பிரிவில், கோயம்புத்தூர் மாவட்டம் 'இதயங்கள்' மற்றும் சென்னை மாவட்டம் 'ஹோப் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட்' ஆகிய இரு அமைப்பிற்கு தலா ரூ.5 லட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். '

இதயங்கள்' அமைப்பானது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டு பராமரிப்பு தேவைப்படும் ஏழைக் குழந்தைகளுக்கு சேவை செய்து வருகிறது.

ஹோப் பப்ளிக் சாரிட்டபிள் டிரஸ்ட், ஆட்டிசம் மற்றும் அறிவுசார் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி, தொழில் பயிற்சி மற்றும் மறுவாழ்வு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டு வருகிறது

'சமூக சேவை' (தனிநபர்கள்) பிரிவில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ராமலிங்கம், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.சொர்ணலதா மற்றும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.ராஜ்குமார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தலா ரூ.2 லட்சம் மற்றும் பாராட்டு சான்றிதழ் கவர்னர் மாளிகையின் சார்பாக வழங்கப்படும்.

எஸ்.இராமலிங்கம், கடந்த 33 ஆண்டுகளாக சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளை கண்டறிந்து அவர்களுக்கு உதவுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். ஜே.சொர்ணலதா, 2009ம் ஆண்டு தண்டுவட மரபு நோயால் பாதிக்கப்பட்ட நிலையிலும், நரம்புத்தசை கோளாறுகள் மற்றும் பல்வேறு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதில் தன்னை ஈடுபடுத்தி கொண்டுள்ளார். ஏ.ராஜ்குமார், வீதிகளில் வாழும் முதியோர்கள், ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தன்னலமற்ற முறையில் சேவை செய்து வருகிறார்.

'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' (நிறுவனம்) பிரிவில் 'சிட்லபாக்கம் ரைசிங் தொண்டு அறக்கட்டளை' (Chitlapakkam Rising Charitable Trust) என்ற சென்னையைசேர்ந்ததன்னார்வ தொண்டு அமைப்பு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பிற்கு ரூ.5 லட்சம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். இவ்வமைப்பு அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய ஒரு தன்னார்வ தொண்டு அமைப்பாகும். சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்த விழிப்புணர்வை பரப்புதல், நீர்நிலைகள் மேலாண்மை, பசுமையாக்கம். கழிவு மேலாண்மை போன்றவற்றில் தனது சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறது.

மேற்படி 'சமூக சேவை மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய விருதுகள் அறிவிக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு வருகின்ற 26.01.2025 அன்று சென்னை கவர்னர் மாளிகையில் நடைபெற உள்ள குடியரசு தின வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு கவர்னர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டு கவுரவிக்கப்படுவார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போக்சோ வழக்கில் பா.ஜ.க. மாநில நிர்வாகி கைது



மதுரை, ஜன.14
பா.ஜ.க.வின் மாநில பொருளாதார பிரிவு தலைவராக பதவி வகித்து வந்தவர் எம்.எஸ்.ஷா. இவர் மதுரை திருமங்கலம் பகுதியில் தனியார் கல்லூரியில் தலைவராக இருந்து வருகிறார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் 15 வயது மதிக்கத்தக்க பள்ளி மாணவி ஒருவர் எம்.எஸ். ஷா மீது பாலியல் புகார் தெரிவித்திருந்தார். இதுகுறித்து சிறுமியின் தந்தை மதுரை தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றைக் கொடுத்திருந்தார்.

அதில் 'தன்னுடைய மகளின் செல்போனுக்கு பா.ஜ.க. நிர்வாகி எம்.எஸ்.ஷா ஆபாசமான உரையாடல்களை அனுப்பி வைத்துள்ளார். இது குறித்து என் மகளிடம் கேட்ட பொழுது சிறுமியின் தாயுடன் பா.ஜ.க. பிரமுகர் முறையற்ற தொடர்பில் இருந்ததும், தனியார் சொகுசு விடுதிக்கு அழைத்து சென்று உங்களுடைய கடனை அடைத்து விடுவதாக கூறி மனைவியோடு தகாத உறவில் இருந்ததும் தெரிந்தது. அதோடு என் மகளுக்கும் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதற்கு முழுமையாகதனது மனைவியும் உடைந்தையாக இருந்திருக்கிறார்' என்று தெரிவித்திருந்தார்.

இந்த புகார் அடிப்படையில் பா.ஜ.க. நிர்வாகி மீதும், அந்த மாணவியின் தாய் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு ஐகோர்ட்டு மதுரை கிளையில் கடந்த பல மாதங்கள் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் ஐகோர்ட்டின் உத்தரவுப்படி பா.ஜ.க. நிர்வாகி எம்.எஸ்.ஷா கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைத்தொடர்ந்து போலீசார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாலையா திரைப்படத்தின் ரீமேக்கா தளபதி 69? விடிவி கணேஷ் சர்ச்சை பேச்சு



நடிகர் விஜய் மற்றும் இயக்குநர் ஹெச். வினோத் கூட்டணியில் உருவாகும் புதிய படம் "தளபதி 69" என்று தற்காலிகமாக அழைக்கப்படுகிறது. இது நடிகர் விஜய்யின் கடைசி படம் என்று கூறப்படுகிறது. இந்தப் படத்தில் விஜய்யுடன் பூஜா ஹெக்டே, பாபி தியோல், மமிதா பைஜு, டிஜே மற்றும் பலர் நடிக்கின்றனர். இப்படத்தின் மீது ரசிகர்களுக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருக்கிறது.

சமீப காலமாக இத்திரைப்படம் தெலுங்கு திரைப்படமான பகவந்த் கேசரி திரைப்படத்தின்ரீமேக்எனவதந்திகள்பரவிவருகிறது.பகவந்தகேசரிதிரைப்படத்தில்தெலுங்கு சூப்பர் ஸ்டாரான பாலைய்யா நடித்து இருந்தார் இந்த படத்தை இயக்குனர் அனில் ரவிபுடி இயக்கினார்.

அனில் ரவிபுடி தற்பொழுது வெங்கடேஷ், ஐஷ்வர்யா ராஜேஷ் மற்றும் மீனாட்சி சவுத்ரி நடிப்பில் சங்கிராந்திகி வஸ்துனம் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படம் வரும் 14 ஆம் தேதி வெளியாகவுள்ளது. இப்படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அதில் படக்குழு அனைவரும் கலந்துக்கொண்டனர். அதில் நடிகர் விடிவி கணேஷ் பேசியது தற்பொழுது சர்ச்சைக்குரிய ஒன்றாய் மாறியுள்ளது.

அதில் அவர் " பகவந்த் கேசரி திரைப்படத்தை விஜய் சார் 5 தடவைப் பார்த்தார். அவருக்கு திரைப்படம் மிகவும் பிடித்து இருந்தது. அதனால் அனில் ரவிபுடியை விஜய் திரைப்படத்தை இயக்குமாரு ஆசைப்பட்டார். இதனால் நான் அனில் ரவிபுடியை அழைத்தேன் ஆனால் ரவிபுடி நான் ரீமேக் திரைப்படம் செய்ய விருப்பமில்லை என கூறிவிட்டார். அங்க தமிழ்நாட்டில் பல முன்னணி இயக்குனர்கள் விஜயின் திரைப்படத்தை இயக்க கியூவில் இருக்கிறார்கள். ஆனால் ரவி வேண்டாம் என கூறிவிட்டார். " உடனே மேடையில் இருந்த இயக்குனர் ரவி "நான் இயக்க மாட்டேன் என கூறவில்லை , ரீமேக் திரைப்படத்தை பண்ண மாட்டேன் என்று தான் கூறினேன். நானும் அவரும் டிஸ்கஸ் செய்தது வேறு அது வேறு படத்திற்கு" என கூறினார்.

இதனால் தளபதி 69 திரைப்படம் பகவந்த கேசரி திரைப்படத்தின் ரீமேக்கா என ரசிகர்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது ?

# கார் பந்தயத்தில் வெற்றி பெற்ற அஜித் குமார்.. திரை பிரபலங்கள் வாழ்த்து



துபாயில் நடந்த 24H சீரிஸ் கார் பந்தயத்தில் அஜித் குமார் ரேசிங் அணி மூன்றாவது இடம் பிடித்து அசத்தியுள்ளது. தனது அணி மூன்றாவது இடம் பிடித்த நிலையில், நடிகர் அஜித் குமார், இந்திய தேசியக் கொடியுடன் வலம் வந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மேலும், மகிழ்ச்சியில் அஜித் குமார் சக அணியினருடன் துள்ளி குதித்து வெற்றியைகொண்டாடினார்.இவரதுவெற்றிக்குரசிகர்கள்,திரைத்துறையை சேர்ந்த பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், திரைத் துறையை சேர்ந்தவர்கள் நடிகர் அஜித் குமாருக்கு வாழ்த்து தெரிவித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டு வருகின்றனர்.

# பொங்கல் அன்று வெளியாகும் ஜெயிலர் 2 படத்தின் அறிவிப்பு வீடியோ




சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் கடந்த 2023 ஆண்டு வெளியான படம் ஜெயிலர். இந்த படம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. வசூல் ரீதியாகவும் படம் வெற்றி பெற்றது. இந்த படத்தை நெல்சன்திலீப்குமார்இயக்க, கலாநிதி மாறனின் சன் பிக்சர்ஸ் தயாரித்திருந்தது.

இந்த படத்தின் 2ம் பாகம் உருவாகும் என ஏற்கனவே நெல்சன் தெரிவித்திருந்தார். இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. படத்தின் "ப்ரோமோ ஷூட்" பணிகள் கடந்த மாதம் நடைப்பெற்றது.

தற்போது ரஜினிகாந்த் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கூலி படத்தில் நடத்து வருகிறார். இந்நிலையில் சன் பிக்சர்ஸ் அடுத்து தயாரிக்கும் சூப்பர் ஸ்டார் திரைப்படத்தின் அறிவிப்பை விரைவில் அறிவிக்கப்போவதாக வீடியோ ஒன்றை நேற்று வெளியிட்டனர். இந்த நிலையில் இந்த ப்ரோமோ வீடியோவை வரும் ஜனவரி 14 ஆம் தேதி மாலை 6 மணிக்கு வெளியாகும் என படக்குழு வெளியிட்டுள்ளது. அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை, திருநெல்வேலி, கோவை, பெங்களூரு, திருவனந்தபுரம், பாலக்காடு, மும்பை உள்ள திரையரங்குகளிலும் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

ஜெயிலர் படத்தில் ரஜியுடன் வினாயகன், ரம்யா கிருஷ்ணன், தமன்னா, யோகிபாபு, மோகன்லால் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். அனிருத் இசையமைத்திருந்தார்.

# சாம்பியன்ஸ் டிராபி தொடர்: இந்திய அணி அறிவிப்பு எப்போது..? வெளியான தகவல்




8 அணிகள் கலந்து கொள்ளும் சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ந் தேதி தொடங்கி மார்ச் 9ந் தேதி வரை நடக்கிறது. இந்த தொடருக்கான அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி குரூப் ஏவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, வங்காளதேசம் அணிகளும், குரூப் பியில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பிடித்துள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அணிகள் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

பிப்ரவரி 19ந்தேதி கராச்சியில் தொடங்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தை சந்திக்கிறது. இதில் இந்திய அணிக்குரிய ஆட்டங்களும் , முதலாவது அரையிறுதியும் துபாயில் நடைபெற உள்ளன. பாதுகாப்பு அச்சுறுத்தலால் இந்திய அணி பாகிஸ்தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் துபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது.

சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான அணிகளை ஜனவரி 12ம் தேதிக்குள் (அதாவது இன்று) அறிவிக்க வேண்டும் என 8 நாடுகளின் கிரிக்கெட் வாரியங்களுக்கும் ஐ.சி.சி. அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இதனிடையே இந்திய அணி குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் வீரர்களின் பட்டியலை தயார் செய்யவில்லை. பும்ரா உள்ளிட்ட சில முன்னணி வீரர்கள் காயத்தில் சிக்கியுள்ளதால் தேர்வு செய்ய கால அவகாசம் தேவைப்படுகிறது. இதனால் காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என பி.சி.சி.ஐ சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் (ஐ.சி.சி) கோரிக்கை வைத்தது.

இந்நிலையில் சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணி வரும் 18 அல்லது 19ம் தேதிக்குள் அறிவிக்கப்படும் என்று பி.சி.சி.ஐ. துணை தலைவர் ராஜிவ் சுக்லா தகவல் தெரிவித்துள்ளார். அன்றைய தேதிகளில் இந்திய அணி தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தேர்வு குழு கூட்டம் நடைபெற்று விவரங்கள் வெளியிடப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

# ஐபிஎல் 2025: பஞ்சாப் அணியின் கேப்டனாக ஸ்ரேயாஸ் ஐயர் நியமனம்



2025ம் ஆண்டுக்கான 18வது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் மார்ச் மாதம் 23ம் தேதி தொடங்குகிறது. 10 அணிகள் பங்கேற்கும் ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் கேப்டன் யார் என்ற விவரத்தை அந்த அணியின் நிர்வாகம் இன்று அறிவித்துள்ளது.

அதன்படி, 18வது ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் கேப்டனாக ஸ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐபிஎல் வீரர்கள் ஏலத்தில் ஸ்ரேயஸ் ஐயரை 26.75 கோடி ரூபாய்க்கு பஞ்சாப் அணி வாங்கியது.

ஐபிஎல் வரலாற்றில் மிகவும் அதிக தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட்ட 2வது வீரர் என்ற பெருமையை ஸ்ரேயாஸ் ஐயர் பெற்றார். தற்போது அவர் பஞ்சாப் அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: மும்பை சிட்டி அணியை வீழ்த்தி ஜாம்ஷெட்பூர் எப்.சி. வெற்றி



13 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் மும்பையில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை சிட்டி எப்.சி. ஜாம்ஷெட்பூர் எப்.சி. அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் அணி சார்பில் முகமது சனான், ஜோர்டான் முர்ரே, ஜாவி ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். மும்பை சிட்டி அணி எந்த கோலும் அடிக்கவில்லை.

இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் ஜாம்ஷெட்பூர்எப்.சி. அணி 30 என்ற கோல் கணக்கில் மும்பை சிட்டி அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.